**செய்தி வெளியீடு எண் : 593** **நாள்: 12.04.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

## தமிழ் புத்தாண்டு, புனிதவெள்ளி உள்ளிட்ட தொடர் விடுமுறையினை முன்னிட்டு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கம் – மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். எஸ். சிவசங்கர் அவர்கள் தகவல்.

-----

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் புத்தாண்டு, புனிதவெள்ளி உள்ளிட்ட தொடர் விடுமுறையினை முன்னிட்டு, பொதுமக்கள் தங்களின் சொந்த ஊர்களுக்கு சென்றிட ஏதுவாக, சிறப்புப் பேருந்துகளை இயக்கிட வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சிறப்பு பேருந்துகள் இயக்கம் தொடர்பாக அரசு போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் திரு K. கோபால், இ.ஆ.ப., அரசு விரைவு போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மற்றும் சிறப்பு அலுவலர் போக்குவரத்துத் துறை, தலைவர் அலுவலகம் ஆகியோருடன் ஆலோசித்தார். அதனடிப்படையில் வரும் 13.04.2022 மற்றும் 14.04.2022 ஆகிய தேதிகளில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், சென்னையிலிருந்து, தினசரி இயக்கக்கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக 1,200 சிறப்புப் பேருந்துகள், திருச்சி, கோயம்புத்தூர், சேலம், நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, தஞ்சாவூர், அரியலூர், மதுரை, நாகர்கோவில், திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் ஓசூர் உள்ளிட்ட முக்கிய ஊர்களுக்கு இயக்க உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், பொதுமக்கள் சென்னைக்கு திரும்பிட ஏதுவாக, வரும் 17.04.2022 அன்றும் அனைத்து முக்கிய நகரங்களிலிருந்து தேவைக்கு ஏற்ப கூடுதலாக பேருந்துகள் இயக்க உத்தரவிட்டுள்ளார். பொதுமக்கள் இந்த சேவையினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in